June 2020

ஜூன் 2020

# Chezhumai

# செழுமை



**Myth Busters (WHO)**

1. Cold weather and snow CANNOT kill the Corona Virus.
2. Hand dryers are NOT effective in killing the coronavirus.
3. There is NO evidence that regularly rinsing the nose with saline has protected people from infection with the coronavirus.
4. The coronavirus CAN be transmitted in areas with hot and humid climates.
5. Garlic is healthy but there is NO evidence from the current outbreak that eating garlic has protected people from the coronavirus.
6. The coronavirus CANNOT be transmitted through mosquito bites.
7. Taking a hot bath DOES NOT prevent the coronavirus.

Till the Government announces about medicine or vaccine for corona virus please be safe and clean

**கட்டுக்கதை (WHO)**

1. குளிர்ந்த வானிலை மற்றும் பனி கொரோனா வைரஸைக் கொல்ல முடியாது.
2. கொரோனா வைரஸைக் கொல்ல கை உலர்த்திகள் பயனுள்ளதாக இல்லை.
3. மூக்கை உப்பு நீரில் தொடர்ந்து கழுவுவது கொரோனா வைரஸால் தொற்றுநோயிலிருந்து மக்களைப் பாதுகாத்துள்ளது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.
4. கொரோனா வைரஸ் வெப்பமான மற்றும் ஈரப்பதமான காலநிலை உள்ள பகுதிகளில் பரவுகிறது.
5. பூண்டு ஆரோக்கியமானது, ஆனால் பூண்டு சாப்பிடுவது கொரோனா வைரஸிலிருந்து மக்களைப் தற்போதைய தீவிர பரவளில் பாதுகாத்துள்ளது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.
6. கொரோனா வைரஸ் கொசு கடித்தல் வழியாக பரவ முடியாது.
7. சூடான குளியல் எடுத்துக்-கொள்வது கொரோனா வைரஸைத் தடுக்காது.

கொரோனா வைரஸிற்கான மருந்து அல்லது தடுப்பூசி பற்றி அரசாங்கம் அறிவிக்கும் வரை தயவுசெய்து பாதுகாப்பாகவும் சுத்தமாகவும் இருங்கள்.

**TIST Tree Planting India Pvt. Ltd**
Flat A, Plot 69, 26th Street, Sankar Nagar, Pammal, Chennai 600075.
Mobile : 9840299822
Email: josephrexontist@gmail.com
Skype: a.joseph.rexon
Web: www.tist.org

**The International Small Group & Tree Planting Program**

TIST - Planting Trees and Improving Agriculture for Better Lives

டிஸ்ட், மரங்களை நடவு செய்தல் மற்றும் சிறந்த வாழ்க்கைக்கு விவசாயத்தை மேம்படுத்துதல்

## வேங்கை மரம்

வேங்கை மரம் பல்வேறு கட்டுமான பணிகளுக்கு உகந்தது மற்றும் அதன் தழை பட்டை, பிசின், மரத்தின் அனைத்து பகுதிகளும் நல்ல மருத்துவ பயனுள்ளது.

வேங்கை மரம் பயிரிட பல வழிமுறைகள் உள்ளன. நேரடியாக விதையை விதைக்கலாம். நாற்றுகள் தயாரித்து நடலாம், நாற்று குச்சிகள் தயாரித்து நடலாம். இம்மூன்றில் நீண்ட ஆணிவேரை உருவாக்கும் திறனை வளர்க்க நேரடி விதைப்பே ஏற்றது.

மரத்திலிருந்து நேற்றுகளை உதிர்த்து உலர்த்த வேண்டும். நேற்றை அப்படியே விதைக்கலாம். மற்றபடி முளைப்பு துரிதமாக இருக்கும். விதை எடுத்து விதைப்பது நல்லது.

நேற்று விதைக்கும் பொழுது நீரிலோ அல்லது சாணக் கரைசலிகரைச்சலிலோ இரண்டு நாட்கள் ஊறவைத்து விதைக்க வேண்டும். மூன்றிலிருந்து நான்கு நாட்களில் முளைப்புத்திறன் அதிகரித்துவிடும்.

நாற்று பெற மேட்டுப்பாத்தி அமைத்து 20 செ.மீ இடைவெளியில் விதைக்க வேண்டும். வரிசையில் 10 செ.மீ இடைவெளி. ஊறவைத்த நேற்று இரண்டு வாரங்களில் முளைக்கும். 40 லிருந்து 90 சதவீதம் முனைப்பு கிடைக்கும்.

ஓரளவிற்கு நாற்றுகள் வளர்ந்ததும் இள நாற்றுகளாக எடுத்து நடவேண்டும். பாலித்தீன் பைகளில் வளர்த்தும் நடலாம்.

நாற்று குச்சிகள் தயாரிக்க ஒரு வருட வளர்ச்சியுடைய நாற்றுகளில் தரைமட்டத்தில் ஒரு சென்டிமீட்டர் பருமம் உள்ளவற்றை எடுத்து நாற்று குச்சிகள் தயாரிக்கவேண்டும்

நேரடி விதைப்பு அல்லது நடவிற்கு 3X3 மீட்டர் இடைவெளி உகந்தது. ஆரம்ப வளர்ச்சி மிகவும் நிதானமாக இருக்கும். இரண்டாம் வருடத்திலிருந்து துரிதமாக வளரும். ஓங்கி உயர்ந்து வளரும் பொழுது சூரிய ஒளி தேவை அதிகமாகும். பிற மரங்களின் நிழல் விழாமல் கவனிக்கவேண்டும்.



## Tiruvallur District

We the members of ASR Small Group from Thiruthani Center of Tiruvlalur District following the best practices at Kirushnasamuthiram Village. Last three years we are with TIST India and we have planted tree species like redsanders, vengai, teak and mango. Also, we are giving good care to the trees by the learnings from TIST Node Meetings and Training Programs. We practiced groundnut as intercrop in between our trees. From the learning through training programs we practiced rice cultivation in other open land and got good income. We also received Rs.3,276 from TIST as tree incentive for our trees. We are informing other farmers about this good program and our thanks to TIST India.

## திருவள்ளூர் மாவட்டம்

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி மையம் கிருஷ்ணாசமுத்திரம் கிராமம் ASR சிறுகுழுவாகிய நாங்கள் மூன்று வருடங்களாக டிஸ்ட் இந்தியா நிறுவனத்துடன் இணைந்து செம்மரம், வேங்கை, தேக்கு மற்றும் மா மரக்கன்றுகளை நடவு செய்துள்ளோம். மேலும் டிஸ்ட் இந்தியா தரும் பயிற்சி மற்றும் கணுக்கூட்டங்களில் கலந்து கொண்டு சிறந்த முறையில் செயல்படகூடிய தகவல்களை தெரிந்து கொண்டு நல்ல முறையில் மரங்களை பராமரித்து வருகின்றோம். மேலும் எங்கள் மரங்களுக்கிடையே ஊடுபயிராக வேர்கடலை சாகுபடி செய்தோம். பயிற்சி கூட்டங்களில் கூறிய தகவல்களின்படி தனியாக இருக்கும் நிலத்தில் நெற்பயிர் அதிக மகசூலுடன் அறுவடை செய்தோம். மேலும் எங்கள் சிறுகுழுவிற்கு ஊக்கத்தொகை ரூபாய் 3,276/- பெற்றுக்கொண்டோம். இது போல இந்த நல்ல திட்டத்தினை மற்ற விவசாயிகளுக்கும் எடுத்து கூறுவோம். எங்கள் சிறுகுழுவின் சார்பாக டிஸ்ட் இந்தியாவிற்கு நன்றியை தெரிவித்து-கொள்கின்றோம்.



Do good to your village. All small groups of a village join together and plant one banyan tree for your village. There is an old wise saying that, “banyan trees attract rain clouds – rain clouds cannot pass away the banyan trees without showering”.

உங்கள் கிராமத்திற்கு நல்லது செய்யுங்கள். ஒரு கிராமத்தில் உள்ள அனைத்து சிறு குழுக்களும் ஒன்றிணைந்து உங்கள் கிராமத்திற்கு ஒரு ஆலமரத்தை நடவு செய்யுங்கள். ஒரு பழைய பழமொழி, “ஆலமரங்கள் மழை மேகங்களை ஈர்க்கின்றன - மழை மேகம் ஆலமரங்கள் மீது பொழியாமல் கடந்து செல்ல முடியாது”.

## Tiruvannamalai District

We the members of SPK Small Group from Thurinjapuram Center of Tiruvannamalai District following the best practices at Vilvarani Village. In 2012 we received 3,500 free tree seedlings from TIST India. We practiced groundnut in between the trees and in our other open land we have cultivated rice and sugarcane. Also, by participating in TIST Node and Training programs we get good information and caring our trees in good way. We are following the natural farming in practicing food crop cultivation. We have planned to practice integrated farming through our small group in the future. We request other small groups to know the benefits of natural farming system and practice like us to get good yield. We convey our sincere thanks to TIST India.

## திருவண்ணாமலை மாவட்டம்

திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சாபுரம் மையம் வில்வராணி கிராமம் SPK சிறுகுழு உறுப்பினர்களாகிய எங்களுக்கு டிஸ்ட் இந்தியா மூலம் கடந்த 2012ஆம் ஆண்டு 3,500 இலவச மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. இம்மரக்கன்றுகளுக்கு இடையே ஊடுபயிராக வேர்கடலை செய்தோம். மரக்கன்றுகள் நடவு செய்த நிலத்தை தவிர மற்ற நிலத்தில் நெற்பயிர் கரும்பு ஆகியவை பயிரிட்டுள்ளோம். மேலும் டிஸ்ட் இந்தியா தரும் பயிற்சி மற்றும் கணுக்கூட்டங்களில் கலந்து கொண்டு சிறந்த முறையில் செயல்படகூடிய தகவல்களை தெரிந்து கொண்டு நல்ல முறையில் மரங்களை பராமரித்து வருகின்றோம். நாங்கள் இயற்கை முறை விவசாயத்தை கடைபிடித்து வருகின்றோம். எங்கள் சிறுகுழுவின் சார்பாக வருங்காலங்களில் ஒருங்கிணைந்த பண்ணை முறை செயல்படுத்த திட்டமிட்டுள்ளேம். எங்களைப் போன்ற மற்ற சிறுகுழு உறுப்பினர்களும் இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவத்தையும் அதன் பயன்களையும் நன்கு அறிந்து சாகுபடி செய்து பயன் அடையுமாறு கேட்டுக்கொள்கிறோம். எங்களுக்கு உறுதுணையாக பல்வேறு ஊக்கங்களை ஊக்குவித்தமைக்கு டிஸ்ட் இந்தியாவிற்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்து-கொள்கின்றோம்.

